5th August 1966]

திரு. முனு ஆதி : நன்செய் நிலங்களை வீடு கட்டும் மனைகளாக மாற்றக் கூடாது என்று மாநிலம் பூராவும் ஒரு சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கூடுமான வரையில் ஹௌசிங் போர்டார் எடுக்கவில்லை. நன்செய் நிலங்களை அப்படி எடுப்பது நல்லதல்ல, உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்க எண்ணம் நல்ல எண்ணம் தான், நன்செய் நிலங்களை வீடு கட்டும் மனைகளாக மாற்றக் கூடாது என்பது. அதனால் நஷ்டம் அடைபவர்கள் அரசாங்கமும், பொது மக்களும்தான். அரசாங்கத் திட்டத்தின் கீழ் நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்யாமல் விட்டு விடுகிறார்கள். அப்படிப் பட்ட நிலங்களின்மேல் அந்த நிலச் சொந்தக்காரர்கள் கூட அல்ல, ஸ்பெக்குலேட்டர்ஸ்—எல்லா ஜில்லாக்களிலும் இப்படி இருக்கிறது —பணத்தைப் போட்டு அவற்றை மனைகளாகப் பிரித்து அதிகமான விலைக்குக் கொடுப்பதினால் அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிரதேசங்களில் விதிகளைத் தளர்த்தி அரசாங்கமே 'பல்க் அக்விசிஷன்', பெருமளவிற்கு நில ஆர்ஜிதம் செய்யக் கூடிய முறையில் வீட்டு மனைத் திட்டத்தின் கீழ் நன்செய் புன்செய் என்ற வித்தியாசம் இல்லாமல் நகரத்தின் விஸ்தரிப்புத் தேவையை முன்னிட்டு நில ஆர்ஜிதம் செய்வதற்குள்ள யோசனையை அதிகாரிகளுக்கு வழங்குவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : உணவு உற்பத்தி கெட்டுவிடக் கூடாது. அதுதான் முக்கிய நோக்கம். தனிப்பட்டவர்கள் தங்கள் தங்கள் நிலங்களை நகரத்தின் பக்கத்தில் இருப்பவர்களுக்கு அதிகமான விலைக்கு விற்று விடுகிறார்கள் என்ற தகவல் அரசாங்கத்திற்கும் வந்திருக்கிறது. அவர்கள் விற்றுவிடுகிறார்களே, அதை ஹௌசிங் போர்டு எடுக்கலாமா என்று யோசனை செய்தோம். எதற்கும் பரிசீலனை செய்துதான் பதில் தெரிவிக்கவேண்டும்.

விவசாயப் பள்ளி மாணவர்கள்

*115 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள விவசாயப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் தொகை என்ன, மாவட்டவாரியாக ?

(இ) அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் என்னென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) : A statement[a] is placed on the table of the House.

திரு. இராம. அரங்கண்ணல் : மதுரைக்கும் இராமநாதபுரத் திற்கும் சேர்ந்து ஒரு பள்ளி இருக்கிறது. அப்படியில்லாமல் மதுரைக்கும் இராமநாதபுரத்திற்கும் தனித்தனியாக பள்ளி வைக்க முயற்சி எடுக்கப்படுமா ?

---

[a] Printed as Appendix II on pages 586–587.

கனம் திரு. பூ. கக்கன் : இராமநாதபுரம் ஜில்லாவில், பரமக்குடியில் ஒரு விவசாய ஸ்கூல் இருக்கிறது. மதுரை ஜில்லாவில் விவசாய ஸ்கூல் இல்லை. சமீபத்தில் அக்ரிகல்சரல் காலேஜில் தற்காலிகமாக ஒரு ஸ்கூல் ஆரம்பித்திருக்கிறோம்.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் மதுரைக்கும், இராமநாதபுரத்திற்குமாக அதை அமைக்கவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் மேசை மீது வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையின் ஏழாவது எண்ணிற்கு நேராக காண்பிக்கப்பட்டிருப்பது—பரமக்குடிக்கு நேரே "பள்ளிகள் எந்த மாவட்டங்களுக்குப் பயன் படுகின்றன" என்ற தலைப்பின்கீழ் 'இராமநாதபுரம், மதுரை' என்றும், மாணவர்களின் எண்ணிக்கையின்கீழ் '20' என்ற விவரமும் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, மதுரைக்கு வேறு, இராமநாதபுரத்திற்கு வேறு என்று தனிப் பள்ளி உள்ளது என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அது விவசாய ஸ்கூல். மதுரையில்
9-00 a.m. விவசாய ஸ்கூல் கிடையாது. விதைப் பண்ணைகள் இருக்கிற இடத்தில் அதை ஆரம்பிக்கிறோம். மதுரையையொட்டி பரமக்குடி இருக்கிறது. ஆகவே, அங்குள்ள பையன்கள் அந்த ஸ்கூலில் சேரலாம் என்று போட்டிருக்கிறார்கள். இப்போது தனியாக ஸ்கூல் வைக்கப்படுகிறது.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, இது போன்ற விவசாயப் பள்ளிகளில் படித்துப் பயிற்சி பெற்ற பல மாணவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அவர்களுக்கு வேலை கொடுக்க ஏதாவது உத்தரவாதம் அளிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த விவசாயப் பள்ளிகளை ஏற்படுத்தியதன் காரணமே, விவசாயக் குடும்பத்தில் பிறந்த வாலிபர்கள், மாணவர்கள் பயின்று தங்கள் தங்கள் நிலங்களில் இன்னும் அதிகமாகப் பாடுபட்டு அங்கே அதிகமாக உற்பத்தியைச் செய்ய வேண்டும் என்ற பெருநோக்கோடு தான் இவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு சிலர் வேலையை விரும்பினாலும் வேலை கொடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

தென்னாற்காடு மாவட்டத்தில் பொதுப் பாசன கிணறுகள்

* 116 கேள்வி—**திரு. ஆ. தங்கவேலு** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் பொதுப் பாசனக் கிணறுகள் வெட்டப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) பயனடைவோர் பேணி வரும் பொதுப் பாசனக் கிணறுகளை கனம் உறுப்பினர் குறிக்கின்றார் எனக் கருதுகிறேன். ஆம் எனில், அத்தகைய கிணறுகள்